


- உண்மைச் சொத்து முகவர்கள்
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள்
- காசினோக்கள்
- சட்டவாளர்கள்
- நொத்தாரிசுகள்
- நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது கம்பனிப் பணிகள் வழங்குவோர், அல்லது
- கணக்காளர்கள்

## ஆகியோருடன் கொடுக்கல்வாங்கல்களை நடத்துகின்றவரா?

### அவ்வாறாயின்

மேற்குறிப்பிட்ட நிதியல்லா வியாபாரங்கள் உங்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது அல்லது உங்கள் தகவல்களைக் காலாந்தர அடிப்படையில் இற்றைப்படுத்தும் பொழுது கீழேயுள்ள தகவல்களைத் தயவுசெய்து வழங்கவும்:

- முழுப் பெயர்
- நிரந்தர வதிவிட மற்றும் அஞ்சல் முகவரி
- தொழில், தொழில்தருநரின் பெயர், வியாபாரம் அல்லது பிரதான நடவடிக்கை
- உங்கள் புகைப்படத்தினைத் தாங்கிய அதாவது வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரரின் அலுவல்சார் தனிப்பட்ட அடையாளம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணங்கள் (உ-ம்: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமப்பத்திரம்)
- பிறந்த திகதி
- தேசியம்
- நிதிகளின் மூலம்
- கொடுக்கல்வாங்கல்களின் நோக்கம்
- தொலைபேசி இலக்கங்கள் (வதிவிடம், அலுவலகம் அல்லது செல்லிடத் தொலைபேசி)

தாங்கள் வழங்கிய தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது மேற்குறிப்பிட்ட தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வது தங்களின் பொறுப்பாகும்.

நிதியல்லா வியாபாரங்கள் அவர்கள் வழங்குகின்ற பணிகளின் தரத்தினை உயர்த்துவதற்காக உங்கள் தகவல்களைச் சேகரிக்கும் போது நிதியியல் குற்றங்களின் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் சட்டபூர்வ தேவைப்பாடுகளைப் பின்பற்றவும்.

நிதியல்லா வியாபாரங்களினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற தகவல்களை வழங்குவதும் சாத்தியமான நிதியியல் குற்றங்களிலிருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட சுமுகமானதும் வினைத்திறன் மிக்கதுமான நிதியியல் பணிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஒத்துழைப்புக்களை நல்குவதும் உங்களின் பொறுப்பாகும்.

எனவே, இது தொடர்பில் தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மனப்பூர்வமாக வேண்டப்படுகிறது.

கூடுதலான தகவல்களுக்காக, நிதியியல் உறவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட **2018 சனவரி 10ஆம் திகதியிடப்பட்ட இல.2053/20 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன) விதிகளைப்** பார்வையிடுவதற்கு கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்யவும்.


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

பணிப்பாளர், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, இல.30., சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk